Registered as aNewspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (23-5-66) இதழ் 105

பராபவ வைகாசி 10 ஸபர் 2 திங்கட்கிழமை

மின்னும் வைரங்களுக்கும்
தங்கப்பவுண் நகைகளுக்கும்
AKS
போன் 519
நகை மாளிகை
கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

## 350 ருத். இறைச்சி புதைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் சின்னக் கடையிலுள்ள ஓர் இறைச்சிக் கடையில், மாநகரசபையின் சுகாதார அதிகாரிகள் நடத்திய திடீர்ப் பரிசோதனையின் விளைவாக, முத்திரையிடப்படாத 350 ருத்தல் மாட்டிறைச்சி கைப்பற்றப்பட்டு யாழ்ப்பாண மாஜிஸ்திரேட்டின் உத்தரவின் மீது நேற்றுமுன்தினம்

(6-ம் பக்கம் பார்க்க)

# தமிழரசு - காங்கிரஸ் பிரதமருடன் பேட்டி

## போதனை மொழி பற்றி விளக்கிக் கூறுவர்

### முஸ்லிம் எம். பி.க்களும் இதில் அக்கறை

கொழும்பு, ஞாயிறு

பள்ளிப்பிள்ளைகளின் போதனைமொழி பெற்றோர் தெரிவுசெய்யும் மொழி என்று இல்லாமல், சம்பந்தப்பட்ட பிள்ளைகளின் தாய்மொழியாகவே இருக்கவேண்டும் என்ற தமது கோரிக்கை சம்பந்தமாக தமிழ் அரசுக்கட்சியினரும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினரும் பிரதம மந்திரியை விரைவில் தனித்தனியே சந்தித்து கருத்துத் தெரிவிக்கவிருக்கின்றனர்கள். போதனைமொழி சம்பந்தமாக அரசாங்கக் கட்சிக்குழு சமீபத்தில் நிறைவேற்றிய தீர்மானத்துக்கு எதிராக பிரதமரிடம் கடுமையான ஆட்சேபம் தெரிவிக்க இந்த இரு கட்சியினரும் முடிவுசெய்திருக்கின்றனர்.

இந்த இரு கட்சிகளையும் தவிர இதர தமிழ் முஸ்லிம் எம். பி.க்களும் ஸ்தாபனங்களும் கூட போதனைமொழி பற்றிய முடிவை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர். தமிழ் பேசும் மக்களின் முக்கிய பிரச்னையான போதனைமொழி விஷயத்தில் இருபெரும் கட்சிகள் ஒன்று சேராமல் தனித்தனியாக பிரதமரைச் சந்தித்து முயற்சிசெய்வது கவலைக்குரியதெனவும் தமிழ்-முஸ்லிம் வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கின்றன.

போதனைமொழி பெற்றோர்கள் விரும்பியபடியே தீர்மானித்துக் கொள்ளலாமென அரசாங்கக்கட்சிக் குழு தீர்மானித்தபோதிலும் இவ்விஷயம் பற்றி இறுதி முடிவுசெய்யப்படவில்லை யெனவும் எந்தக்கட்சியும் இதுபற்றித் தெரிவிக்கும் கருத்தை புனராலோசனை செய்யலாமெனவும்பிரதமர் சில தினங்களுக்குமுன் பார்லிமென்டில் தெரிவித்திருந்தார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## பொதுமக்களுக்கு எச்சரிக்கை!

### யாழ் நகரில் திருடர் நடமாட்டம்: தகவல் கொடுப்போருக்கு சன்மானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண நகரிலும் சுற்றுப்புறங்களிலும் நடமாடித் திரியும் திருடர்களிடமிருந்து வீடுகளையும் உடைமைகளையும் பாதுகாத்துக்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் பொலிஸார் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

சிறைத்தண்டனை அனுபவித்து வெளியே வந்திருக்கும் கொள்ளைக் கோஷ்டி ஒன்றுவீடுகளையும் கடைகளையும் உடைத்துத் திருடுவதில் முனைந்திருக்கிறதென்று கூறப்படுகிறது. பகிரங்கமான இடங்களிலும் கடை வீதிகளிலும் சைக்கிள்களைப் பூட்டாமல்வைக்கவேண்டாமென்று பொலிஸார் கோரியுள்ளனர்.

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியிலுள்ள 'பாட்டரி' கடையொன்றில் திருடர் கோஷ்டியொன்று கூரை வழியாக நுழைந்து பல பொருள்களை திருடிச் சென்றுள்ளனர். யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியிலுள்ள ஒரு கடையை உடைத்து திருட்டு நடைபெற்றுள்ளது.

சந்தேகத்துக்கிடமான முறையில்வீதிகளில்உலாவித் திரிபவர்கள்மீது எச்சரிக்கையாக விருக்குமாறும் உடனுக்குடன் பொலிஸாருக்குத் தகவலளிக்குமாறும் பொலிஸ் அறிவிப்பொன்று கூறுகிறது.

திருடர் பற்றிய தகவல் கொடுப்பவர்களுக்கு பொலிஸ் பகுதி சன்மானம் அளிக்கும்.

## இடதுசாரி - சுதந்திர கட்சி ஒற்றுமை

### நீடிக்குமா இல்லையா என்பது பற்றி ஆகஸ்டில் முடிவு

கொழும்பு, ஞாயிறு

சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய இடதுசாரிக்கட்சிகளுடன் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி தொடர்ந்து இணைந்து இயங்குவதா இல்லையா என்பது பற்றி இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 4ந் தேதி குருநாகலையில் நடைபெறவிருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வருடாந்த மகாநாட்டில் தீர்மானிக்கப்படவிருக்கிறது.

இடதுசாரி கட்சிகளுடன் உள்ள ஒற்றுமையைத் தொடர்ந்து நிலைநாட்ட வேண்டுமென்று ஒருசாரார் கூறும் அதேசமயம் மற்றொருசாரார் இத்தொடர்பைத் துண்டிக்கவேண்டுமென்று வலியுறுத்துகின்றனர்.

## 'ஸ்பென்சர்' கொலைவழக்கு

### ஆகஸ்ட் 9-ல் விசாரணை

காலி, ஞாயிறு

ஸ்பென்சர் கொலைவழக்கு காலி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் ரி. எஸ். பெர்ணண்டோ கியூ. ஸி. முன்னிலையில் மறுவிசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதியரசர் ஆகஸ்ட் மாதம் 9-ம் திகதி வரை விசாரணையை ஒத்தி வைத்தார்.

எதிரி சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. சிறி பெரேரா கியூ. ஸி. வேறு நீதிமன்றங்களில் வழக்குகளுக்கு ஆஜராக வேண்டியிருப்பதால் தவணை தரும்படி நீதியரசரிடம் கேட்டுக் கொண்டார்.

இவ்வழக்கில் கதிர்காமத்தில், முன்னாள் மாவட்ட நீதிபதி ஸ்பென்சர் ராஜரத்தினத்தை, பூநகரி முன்னாள் கிராமசேவகரான வீரவாகு சின்னத்தம்பி கத்தியால் குத்திக் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## பிரதமர் நன்றி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண மக்களுக்குப் பிரதமர் டட்லி சேனநாயக்கா நன்றி தெரிவித்துள்ளார்.



யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யுமாறு பிரதமர் திரு. டட்லிசேனநாயகாவை அழைப்பதென்றும் அவருக்கு யாழ்ப்பாண மக்கள் சார்பில் பொது வரவேற்பு ஒன்று அளிப்பதென்றும் சென்றமாதம் 29-ந் திகதி நடைபெற்ற மாநகர சபைக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரதியொன்று இம்மாதம் 7-ந் திகதி பிரதமருக்கு மாநகரசபையினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

இதற்கு நன்றி தெரிவித்து பிரதமர் அனுப்பியுள்ள பதிலில் யாழ்ப்பாண மக்களுக்கும் யாழ்ப்பாண மாநகரசபை அங்கத்தவர்களுக்கும் நன்றி தெரிவித்திருக்கிறார். "உங்கள் அழைப்பை ஏற்றுக்கொள்கிறேன். ஒய்வு கிடைக்கும் சமயத்தில் அங்கு விரைவில் வருவேன். அதற்கான திகதியை பின்னர் அறிவிப்பேன்" என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

கல்விமசோதா

## மந்திரிக்கு அளிக்கப்படும் அதிக அதிகாரங்கள்

### அரசாங்க கட்சிக்குழு கூட்டத்தில் கண்டனம்

கொழும்பு, ஞாயிறு

கல்வி மந்திரியின் உந்தேச கல்வி மசோதாவுக்கு அரசாங்க பார்லிமெண்டரிக் குழுவின் விசேஷ கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பேசிய பிரதமர் திரு. டட்லி சேனநாயகா, நாட்டின் உயர் கல்வி குழப்பத்திலிருப்பதாகவும் நிலைமையை சீராக்குவதற்குத் தெரிவிக்கப்படும் எந்தக் கருத்தையும் தாம் ஆராய்வதற்குத் தயாராகவிருப்பதாகவும் தெரிவித்தார்.

பல்கலைக்கழக நியமனங்கள் உட்பட கல்வி மந்திரியிடம் அதிக அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன சம்பந்தமாகவே அதிக எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. கல்வி மந்திரிக்கு இவ்வித அதிக அதிகாரங்கள

(6-ம் பக்கம் பார்க்க)

காங்கேசன்துறை

## சிமெந்து தொழிற்சாலை 2-வது சூளை

### இன்று வேலை ஆரம்பம்

மாவிட்டபுரம், திங்கள்

மேற்கு ஜேர்மனி அளித்த 46 லட்சம் ரூபாய் கடனுதவியுடன் அமைக்கப்பட்ட காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் இரண்டாவது புதிய சூளை இன்று 12 மணிக்கு பரீட்சார்த்தமாக வேலைசெய்ய ஆரம்பிக்கவிருக்கின்றது. சிமெந்துத் தொழிற்சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட இச் சூளையின் பரீட்சார்த்த ஆரம்பம் சைவாசாரப்படி மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசாமி கோவில் பிரதம குரு சிவஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்களால் ஆரம்பிக்கப்படும். இவ்வைபவம் தொழிற்சாலை அதிபர் திரு. சுப்பிரமணி

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

என் குறிக்கோள் வரையறைக்குட்பட்டது. மிகவும் சிறியது. நான் விரும்புவதெல்லாம் சமூகத்தில் மதிப்புப் பெறக்கூடிய காரியத்தை நடத்தும் ஊழியர் குழாம் ஒன்றை உருவாக்குவதே.

—விநோபாஜி


# ஈழநாடு

EELANADU; National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna; Phone: 387

[illegible] பராபவ ஆண்டு வைகாசி மீ 10 உ (23-5-66)


## கடற்றொழில் விருத்தி

வடக்கு கிழக்கு மாகாணங்களில் மீன்பிடித் தொழில் அபிவிருத்தியடைந்து வந்துள்ளதென்றும் சென்ற நான்கு வருட காலமாக மீன்பிடித் தொழிலில் யாழ்ப்பாண பகுதியே முன்னணியில் நிற்பதாகவும், மீன்பிடி இலாகா டைரக்டர் 1964-65ம் வருடத்துக்கான தமது நிர்வாக அறிக்கையில் தெரிவித்திருப்பது உற்சாகமும் நம்பிக்கையும் அளிப்பதாக இருக்கிறது.

இலங்கை கடலாற் சூழப்பட்டிருப்பினும் நமது நாட்டுக்கு தேவையான மீன் கிடைக்காததால் வெளிநாடுகளிலிருந்தும் மீன் இறக்குமதிசெய்யப்படவேண்டிய துரதிஷ்டமான நிலை இன்னும் நீடித்துவருகிறது. இலங்கை சுதந்திரமடைந்து பதினெட்டு ஆண்டுகளாகியும், நமது தேவையைப் பூர்த்திசெய்து கொள்ளக்கூடிய அளவுக்குக்கூட நாம் கடற்றொழிலை விருத்திசெய்து கொள்ளத் தவறிவிட்டோம். கடற்றொழிலில் ஈடுபட்டு, மீன்பிடித்தொழிலை விருத்திசெய்யக்கூடிய உழைப்புத் திறன் மிகுந்த மக்களும் இங்கிருந்தும் அவற்றைச் சரியான முறையில் பயன்படுத்த இதுவரை ஆட்சி பீடத்தில் இருந்தவர்கள் தவறிவிட்டனர். அரசியல் மற்றும் பல விஷயங்கள் இதற்குக் காரணமாக இருக்கலாம். இன்று தேசிய அரசாங்கம் ஆட்சி பீடத்திலிருப்பதால் இந்தக் குறையை விரைவில் நிவர்த்திசெய்து நாட்டின் சுயதேவையைப் பூர்த்தி செய்வதுடன் பொருளாதாரத்தையும் விருத்திசெய்யலாம்.

இந்த வகையில் கடற்றொழில் கூட்டுஸ்தாபனத் தலைவர் வடக்கு கிழக்கு மாகாணங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து இவ்விரு மாகாணங்களின் கடற்றொழில் அபிவிருத்தி சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்தியது நம்பிக்கை அளிக்கிறது. வெறும் பேச்சுவார்த்தைகளும், திட்டங்களும், ஆலோசனைகளும் உரிய பயனையோ, நிலைமையை மேம்படுத்தவோ உதவமாட்டாது எந்த ஆலோசனைகளும், திட்டங்களும் உடனடியாகச் செயல்படுத்தப்படவேண்டும். இல்லையேல் அவற்றால் பயனில்லை.

1964ம் வருட இறுதியில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வீசிய கோரப் புயலினால் மீன்பிடித்தொழிலையே நம்பி வாழ்ந்த பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. அவைகளுக்கு இன்னும் சரியான முறையில் உதவி வழங்கப்படவில்லை. அவர்கள் புனர்வாழ்வு பெறவுமில்லை. கடற்றொழில் விருத்திபெறுவதற்கு அத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்குப் போதிய பாதுகாப்புஅளிக்கப்படவேண்டும். விவசாயிகளுக்கு இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வரப்பட்டதுபோல் கடற்றொழிலாளருக்கும் இன்ஷூரன்ஸ் திட்டம் அவசியம். இது தவிர உலகில் மீன்பிடித் தொழிலில் முன்னணியில் நிற்கும் ஜப்பான்போன்ற நாடுகளின் ஆலோசனையையும், உதவியையும் பெற்று நமது நாட்டிலும் கடற்றொழிலை நவீன, இயந்திரசாதன உதவியுடன் சீர்திருத்தவேண்டும்.

நாட்டின் பொருளாதார விருத்தியை மட்டுமே குறிக்கோளாகக்கொண்டு இத்துறையில் கவனம் செலுத்தினால் நிச்சயம் வெற்றி கிட்டும். மீன்பிடித்துறைகள் அமைத்து மீன்பிடி இயந்திர வள்ளங்கள், வலைகள் மற்றும் வசதிகள் செய்தும் மீனவர்களுக்கு உற்சாகமும், உதவியும் அளித்தால் நாமே வெளிநாடுகளுக்கு மீன்களை ஏற்றுமதிசெய்ய முடியும்.

ஆசிரியருக்குக் கடிதம்

## போதனாமொழி

கௌரவ கல்வி அமைச்சரின் பொதுக்கல்வி பற்றிய மசோதாவில் போதனாமொழியைப் பெற்றோரே தெரிவுசெய்வர் எனக்குறிப்பிடப்பட்டிருப்பது நம் மொழியைப் பொறுத்தவரையில் பாரதூரமான விளைவுகளைக் கொண்டுவரலாம். அதுபற்றி 'ஈழநாடு' வார இதழில் வெளியான அரசியல் விமர்சனக் கட்டுரை சரியான கருத்துக்களை தெளிவாக விளக்குகிறது.

உத்தியோகமோகம், வேறுசில நெருக்கடிகள் காரணமாகத் தமிழ்ப்பெற்றோர்கள் தம்மொழியைக் கைவிட அமைச்சரின் திட்டம் வாய்ப்பும் மறைமுகமான தூண்டுதலையுமளிக்கும். தாய்மொழி தவிர்ந்த பிறிதொரு மொழியில் கல்வி கற்பிப்பது மாணவர்க்கு தீங்கை விளைவிக்குமென்பது கல்வியறிஞரும் மனித அடிப்படையுரிமைப்பட்டயமும் ஏற்றுக்கொண்ட உண்மை. ஆகவே தமிழ்ப் பிள்ளைகள் தம்மொழி தவிர்ந்த வேறொருமொழியில் கல்விபெறச்சட்டம் இடம் கொடுக்கக்கூடாது. தமக்கெனச் சொந்தமொழியின்றியிருக்கும் பறங்கியர் போன்ற இனத்தவர்க்கு தெரிவுசெய்யும் வசதியை அளிப்பதே அமைச்சரின் எண்ணமெனில் அதனை மசோதாவில் அக்கருத்துப்பட தெளிவாகக்குறிப்பிட்டிருக்கலாம். இவற்றால் அரசாங்கப் பாராளுமன்றக்கூட்டத்தில் தமிழ்ப்பிரதிநிதிகளின் ஒருமனதான திருத்தத்தை கௌரவ கல்வி அமைச்சர் ஏற்றுக்கொள்ளாதது பிழையானதாகவே தெரிகிறது.

தமிழ்ப்பிரதிநிதிகள் எவரினதும் பங்குபற்றுதலின்றியே நிறைவேற்றப்பட்ட தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3-ம் பிரிவின் 1-ம் உபபிரிவில் தமிழ்மாணவர்கள் தமிழ்மொழிமூலம் கல்வி பெறும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் அச்சட்டத்தின் 3-ம் பிரிவின் பிற்பகுதியை நோக்கும்போது தமிழ்ப்பிள்ளைகளுக்கு சிங்களமொழிமூலம் கல்வி கற்பிக்கப்படும் ஒரு நிலைமையைக்கூட அச்சட்டம் எதிர்பார்க்கவில்லையென்பது தெளிவாகும். ஆகவே அடிப்படையான இவ்வுரிமையை மறைமுகமாக ஒழித்துக்கட்ட வாய்ப்பளிக்கும் சட்டமொன்றினை தமிழ் உறுப்பினர்களைக்கொண்ட அரசாங்கமேநிறைவேற்றியதென நமதுபிற்சந்ததியினர் கூறுமலிருக்க ஆவன செய்ய வேண்டியது தமிழ்ப்பிரதிநிதிகளின் தலையாய கடனாகும்.

''அனுதாபி''
அனலைதீவு.

# விலைக்கட்டுப்பாட்டு மசோதா
## புதிய சட்டம் தரும் பலன்கள் என்ன?

சபாநாயகர் சர் அல்பேர்ட் பீரிஸ் தலைமையில் பார்லிமெண்டில் விலைக்கட்டுப்பாட்டு (திருத்த) மசோதாமீது அங்கத்தவர்களுக்கிடையே காரசாரமான விவாதம் இடம்பெற்றது.

திருத்தமசோதாவைத் தாக்கல் செய்து வைத்த உணவு விவசாய மந்திரி திரு. எம். டி. பண்டா புதிய திருத்த மசோதாவின் உண்மையான நோக்கங்களையும், அதனால் பதுக்கல்காரர்களுக்கு, கொள்ளை லாபமடிப்பவர்களுக்குக் கிடைக்கும் தண்டனையும் பொதுமக்களுக்கு ஏற்படும் நன்மையையும் விளக்கமாக எடுத்துரைத்தார்.

பார்லிமெண்டில்...

### வேறுபாடுகள்

இப்பொழுதுள்ள விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்துக்கும் பார்லிமெண்டில் விவாதத்துக்குள்ளாகியிருக்கும் விலைக்கட்டுப்பாட்டு (திருத்த) மசோதாவுக்கும் (புதிய சட்டம்) இடையேயுள்ள வேறுபாடுகள் என்ன?

தற்போதுள்ள சட்டத்தின்படி, கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க கூடுதலான விலைக்குப் பொருள்களை விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு அபராதம் விதிக்கவும் அல்லது நீதிமன்றம் கலையும் வரை சிறைத் தண்டனை வழங்கவுமே முடியும்.

ஆனால் புதிய சட்டம் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வழி செய்கிறது. கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க கூடுதலான விலைக்கு பொருள்களை விற்று கொள்ளை லாபமடிக்கும் வியாபாரிகளுக்கு குறைந்த பட்சம் நான்கு வார கால கடூழியச் சிறைத் தண்டனையும் இரண்டாவது தடவையாகவும் குற்றம் செய்பவருக்கு மூன்று மாத காலம் முதல் அதற்குக் கூடுதலான ஆறுமாத காலம் வரை கடூழியச் சிறைத் தண்டனையும் அவசியமேற்படின் அபராதமும் வழங்க வகை செய்கிறது.

### 1957ம் ஆண்டு சட்டம்

பார்லிமெண்டில் இதனை விளக்கிப் பேசிய உணவுமந்திரி பண்டா, தற்போதுள்ள விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம் 1957-ம் ஆண்டில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டதென்றும் அச்சட்டத்தின்கீழ் குற்றம் புரியும் வியாபாரிகளுக்கு சிறைத்தண்டனை வழங்குவது ஒரு அம்சமாக இருந்தபோதிலும் இப்படியான தண்டனை வழங்கப்படுவதில்லை. என்றும் நீதிமன்றம் கலையும்வரை மட்டுமே சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறதென்றும் கூறினார்.

''விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீறுவது இப்பொழுது குறிப்பாக கொழும்பு நகரில் தாராளமாக நடைபெற்று வருகிறது. வெறும் அபராதங்களை விதிப்பதன்மூலம் கொள்ளை லாபமடிப்பவர்களின் ''கொட்டத்தை'' அடக்க முடியாது. கடூழியச் சிறைத்தண்டனைகளை விதிப்பதன் மூலம் சிறையும் பத்தாயிரம் ரூபாவுக்குக் குறைந்த அபராதமும் விதிப்பதன் மூலமே கொள்ளைலாபமடிக்கும் வியாபாரிகளின் கொட்டத்தை அடக்க முடியும் என்று அரசாங்கம் கருதுகிறது'' என்று உணவு மந்திரி திரு. எம். டி. பண்டா தெளிவாக விளக்கியிருக்கின்றார்.

### சின்ன மீன்களும் பெரிய சுருக்களும்

மசோதாமீது திரு. டி. பி. ஆர். வீரசேகரா பேசுகையில், விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் தண்டனை பெறும் பெரிய ''சுருக்கள்'' இலேசாகத் தப்பிவிடுவதையும் ''சின்ன மீன்கள்'' அகப்படுவதையும் சுட்டிக்காட்டினார். திருத்தச்சட்டத்தை எதிர்க்கட்சியினர் ஆதரிக்கின்றனர் என்று கூறிய அவர், மந்திரிகள் சிலருக்குத்தான் நாட்டில் நடப்பது புரியாத புதிராக இருக்கிறது என்றார்.

கிராமப் புறங்களிலுள்ள சில்லறை ''மீன்கள்'' தான் விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தினால் பெரிதும் தண்டனை பெறுகிறார்கள். ஆனால் நகரப் புறங்களிலுள்ள பெரிய 'சுருக்கள்' பதுக்கல்களிலிருந்தும் கொள்ளை லாபமடிப்பதிலிருந்தும் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர். கூட்டுறவு ஸ்தாபனங்களின் மனேஜர்கள் பலர் குற்றவாளிகளாகக் காணப்பட்ட பொழுதிலும் தண்டனைகளிலிருந்துஎப்படியோ தப்பிவிடுகின்றனர். இதற்கு அரசியல் தலையீடு -செல்வாக்கு காரணம் என்று திரு. வீரசேகரா குறை கூறினார்.

### ரஷ்யாவைப் போல...

விலைக்கட்டுப்பாட்டு அமுலுக்கு திரு. வீரசேகரா, ரஷ்யாவின் வழியைப்பின்பற்றுமாறு அரசாங்கத்துக்கு சிபார்சு செய்தார். ரஷ்யாவைப்போல மொத்த வியாபார வர்த்தகம் முழுவதையும் அரசாங்கம் பொறுப்பேற்று விலைக்கட்டுப்பாட்டு முறை நாடுமுழுவதும் அமுலுக்கு வரவேண்டும் என்று கோரினார்.

### சொல்மாரி

இதேநேரத்தில் எதிர்க்கட்சி அங்கத்தவர் திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி, புதிய விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம் குறித்து அரசாங்கம் மீது குற்றம்சாட்டினார்.

''புதிய மசோதா எந்த வழியிலும் பயனற்றது. இதன் மூலம் அரசாங்கம் எந்த நன்மையும் அடைய முடியாது என்று அபிப்பிராயம் தெரிவித்த இவர் புதிய யோசனை யொன்றையும் தெரிவித்தார்.

பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்தவேண்டுமென்று அரசாங்கம் உண்மையாக விரும்பினால் அதற்கும் ஒரு வழியுண்டு. தனியாரின் இறக்குமதி லைசென்சுகளையெல்லாம் படிப்படியாக அரசாங்கம் ரத்துச்செய்தால் என்ன என்று திரு. ஜெயக்கொடி வினவினார்.

இவரைத் தொடர்ந்து 'பாணம்' தொகுத்த திரு. பி. வை. துடாவே (கம்யூனிஸ்ட்), புதிய மசோதா சில்லறை வர்த்தகர்களை மட்டுமே கட்டுப்படுத்துகிறதென்றும் கட்டுப்பாட்டு

(6-ம் பக்கம் பார்க்க)

## நாட்டிலும் நகரிலும்

திருவள்ளுவர் தாடி வளர்த்தாரா அல்லது க்ஷவரம் செய்து கொண்டாரா என்ற பிரச்னை சமீபத்தில் சென்னையில் எழுந்தது. அண்மையில் நெருங்கி வரும் திருவள்ளுவர் தினத்தில் அங்கே அவருடைய முழு உருவச் சிலை ஒன்றை பிரதிட்டை செய்ய சென்னை அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. வெண்கலத்தில் வார்க்கப்படும் இச்சிலை 29,000 ரூபா செலவில் உருவாகிறது. அதன் சிற்பி திரு. எஸ். பி. பிள்ளை என்பவர்.

அவர் சிருஷ்டிக்கும் சிலையில் திருவள்ளுவர் வளவளப்பான இறுகிய தேகக்கட்டோடும், வாரிச் சீவிய நீண்ட தாடியோடும், பெரிய மீசையோடும் காட்சியளிக்கிறார். மேல் முடி அழகாகச் சீவி புளியங்காய் கூடையாக உச்சியில் கூட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. தபால் முத்திரையில் தோன்றிய வள்ளுவர் இனி தெருச் சிலையாகவும் காட்சிதரப் போகிறார்.

வள்ளுவருக்கு தாடி உண்டா என்று யரோ ஒருவர் கேட்டபோது, 'தயவு செய்து இதைப் பற்றி என்னைக் கேளாதீர், சென்னை அரசாங்கம் கொடுத்த கட்டளை பிரகாரம் இந்தச் சிலையைச் செதுக்குகிறேன்' என்று திரு. பிள்ளை கூறினாராம். இதன் அர்த்தமென்னவென்றால், தமது சொந்த கற்பனையின்படி விட்டால் அதை வேறு விதமாகவும் செதுக்கியிருக்கலாம் என்பது தானே?

வள்ளுவர், கம்பர், அகத்தியர், இளங்கோ, சேக்கிழார் முதலியவர்களை சித்தரிப்பவர்கள் தங்கள் தங்கள் கற்பனைக்கு ஏற்ற விதமாக அவர்களை சித்தரிக்கிறார்கள். ஏன், நமது தெய்வங்களையே பாருங்கள்! பிள்ளையாரையும், முருகனையும், சிவபெருமானையும் சைத்திரிகர்கள் ஒவ்வொரு விதமாக கற்பனை செய்து சிருஷ்டிக்கிறார்கள். சிற்பிகள் தத்தம் கற்பனைக்கொப்ப செதுக்குகிறார்கள். சினிமாக்காரர்கள் நினைத்தபடி கற்பிக்கிறார்கள். எது சரி, எது பிழை என்று எவருமே தீர்மானிக்க முடியாது.

சமீபத்தில் இலங்கைக்கு வந்து போன ஒரு சினிமா ஜோடியை பத்திரிகை புகைப்படம் பிடிப்பவர்கள் பற்பல 'போஸ்'களில் பாய்ந்து பாய்ந்து படம் பிடித்து காட்டினார்கள். இதுபோலத்தான் சைத்திரிகர்களும் ஓவியர்களும் முருகனை பலவித 'போஸ்'களில் காட்டுகிறார்கள். ஒன்றில் அவன் மயிலைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறார், மற்றதில் அவன் அதன் மீது ஆரோகணித்திருக்கிறான்

இப்படியே தான் திருவள்ளுவரின் தாடியும், பொதுவாக அறிவாளிகளை தாடியுடன் சித்தரிப்பது வழக்கம். தாடியும் ஞானத்துக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு நெடுங்காலமாக இருந்து வருகிறது. ஸோக்கிற்றரீஸ் ஷேக்ஸ்பியர், வால்மீகி எல்லோரும் 'தாடிவாலா'க்கள். பிற்காலத்தில் புகைப்படக் கருவி வந்தபின் துலங்கிய அறிவாளிகளும் தாடி வளர்த்தே வந்திருக்கிறார்கள். தாகூரும், டொல்ஸ்டோயும் ஐன்ஸ்டீனும் தாடி வளர்த்தார்கள்.

புத்த பகவான் மட்டும் எப்படியோ ஒருபோதும் தாடியுடன் சித்தரிக்கப்படவில்லை. அவர் 35-வது வயதிலேயே உலக வாழ்வை துறந்து விட்ட படியினாலோ என்னவோ? ஸ்ரீ கிருஷ்ண பகவானும் அப்படியே. அவரும் பால்ய லீலைகள் புரிந்தவர் என்பதற்காகவோ?

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்னும் போரில் 4 லட்சம் துருப்புக்களை அமெரிக்கா ஈடுபடுத்துமாம்!

## கிளர்ச்சி துருப்புக்களுக்கு பதிலடி தருவோம் என யு.எஸ். எச்சரிக்கை

### வியட்னும் நிலைகுறித்து ஜோன்ஸன் கவலை

சைகோன் மே 22

தங்கள் ராணுவ நிலைகளை கிளர்ச்சித்துருப்புக்கள் தாக்கினுல், பதிலுக்கு தாக்குதல் நடத்தப்படும் என பௌத்த ஆதரவு துருப்புக்களுக்கு அமெரிக்க ராணுவம் எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

டாணுங்கிலுள்ள அமெரிக்க விமானத் தளத்தைத் தாக்கப்போவதாக கிளர்ச்சிக்காரர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது. எனினும் அங்குள்ள அமெரிக்க விமானங்கள், பாதுகாப்பை முன்னிட்டு தென்வியட்னுமிலுள்ள இதர தளங்களுக்கு அகற்றப் பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது

அதேசமயம் இன்று காலை டாணுங்கில் 3 டாங்கிகள் சகிதம் அரசாங்கத்துருப்புக்கள் கிளர்ச்சிக்காரரின் பகோடாவைத் தாக்கினர் என்றும், ராக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டது எனவும், இதனுல் 50க்குமேற்பட்டோர் கொல்லப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

எதிர்ப்பு குறைவாகவே இருந்தது. கிளர்ச்சிக்காரர்களிடம் வெடிமருந்து கையிருப்புகுறைந்துள்ளதே இதற்குக்காரணம் என மேலும் அறிவிக்கப்பட்டது.

ஆனுல் டாணுங்கிலுள்ள அமெரிக்க விமானத் தளத்தை கிளர்ச்சிக்காரர்கள் மோர்ட்டர் குண்டுகளினுல் தாக்கினுர்கள்.

தென்வியட்னுமில் 4 லட்சம் அமெரிக்க துருப்புக்களை ஈடுபடுத்த அமெரிக்கா பொறுப்பேற்றுக் கொண்டிருப்பதாக, அமெரிக்க தளபதி ஜெனரல் மாக்ஸ் வெல் டெய்லர் கூறினுர்.

ஹூகவ நகரில் பௌத்தர்கள் அமெரிக்க தூதராலயத்தை நோக்கிச் சென்று கீ அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதை நிறுத்தும்படி ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

வியட்னுமில் கம்யூனிஸ்டுகளுக்கெதிரான தங்கள் நடவடிக்கைக்கு, அங்கு ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைபற்றி ஜனுதிபதி ஜோன்ஸன் கவலை தெரிவித்திருக்கிறுர்.

கீ அரசாங்கம் உடனடியாக ராஜினுமா செய்ய வேண்டும் என பௌத்ததலைவர் திரு. ஜிகுவாப் மீண்டும் வற்புறுத்தினுர்.

## பிரபல கொள்ளை தலைவன் பலி

புதுடில்லி, மே 22

உத்தரப் பிரதேசத்தின் பிரபல கொள்ளைத் தலைவனுன மகாவீரா நேற்று சுட்டுக்கொல்லப்பட்டான். பொலிஸாருடன் நடைபெற்ற கைகலப்பில் அவனது மற்றுமிரு சகாக்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கொள்ளையரின் தாக்குதலால் ஒரு சப்இன்ஸ்பெக்டருக்குக் குண்டுக் காயமேற்பட்டது. ஏராளமான துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டன.

## குடிகாரருக்கு எதிராகப் பிரசாரம்

### கம்யூனிஸ்ட் வாலிபர் இயக்கம் தீர்மானம்

மாஸ்கோ, மே 22

குடிகாரர், கொள்ளைக்காரர் ஆகியோருக்கு எதிராகவும், மேற்கத்தியக் கொள்கைகளுக்கு எதிராகவும் தீவிர பிரசாரம் செய்ய வேண்டுமென ரஷ்யக் கம்யூனிஸ்ட் வாலிபர் இயக்கம் தனது மகாநாட்டில் தீர்மானம் இயற்றியுள்ளது. 230 லட்சம் அங்கத்தவர்களைக் கொண்ட இந்த இயக்கத்தின் நான்கு நாள் மகாநாடு கிரெம்ளினில் நடைபெற்றது. கம்யூனிஸ்ட் தலைவர்கள் இளைஞர்களின் கல்வியில் அக்கறைகொள்ள வேண்டுமென்று கோரும் தீர்மானமும் இம்மகாநாட்டினுல் நிறைவேற்றப்பட்டது (பி டி ஸி)

## எங்கும் அணுகுண்டு என்பதே பேச்சு!

ஈக்வடோர், மே 22

தென்பசிபிக்கில் அணுசோதனை நடத்துவதென்ற முடிவை, பிரான்ஸ் மாற்றிக்கொள்ளாவிட்டால் இச்சோதனையை நிறுத்தும்படி ஐ.நா.வில் புகார் தாக்கல் செய்யப்போவதாக ஈக்வடோர் தெரிவித்துள்ளது ஈக்வடோர், தென்னமெரிக்காவைச் சேர்ந்த ஒரே நாடாகும்

இதற்கிடையில் அடுத்த ஆண்டு இஸ்ரேல், அணுகுண்டுகளைத் தயாரிக்கவிருப்பதாக கெய்ரோ பத்திரிகை அல்அஹ்ரம் கூறியிருக்கிறது.

## பத்திரிகையாளர்களுக்கு சொந்தப்பயிற்சி நிலையம்

### பிரிட்டிஷ்பத்திரிகை ஸ்தாபனம் ஆரம்பிக்கிறது

லண்டன், மே 22

பிரிட்டனின் மிகப் பெரும் செய்தி பத்திரிகை ஸ்தாபனமான "சர்வதேச பிரசுர கார்ப்பரேஷன்" பயிற்சி பெற்ற பத்திரிகை எழுத்தாளர்கள் போதுமான அளவு கிடைக்காததால் பத்திரிகை துறை பயிற்சி நிலையம் ஒன்றை சொந்தத்தில் ஆரம்பிக்கிறது.

பயிற்சி அளிப்பதற்காக மட்டும் தினசரி பத்திரிகை ஒன்றையும், இரு வாரப் பத்திரிகைகளையும் அது விலைக்கு வாங்கியுள்ளது.

உலகின் மிகப் பெரும் பத்திரிகை ஸ்தாபனமான (ஐ பி. ஸி) சர்வதேச பிரசார கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான "டெயிலி மிரர்" பத்திரிகை நாள் ஒன்றுக்கு 50 லட்சம் பிரதிகள் விற்பனையாகிக்கின்றன.

52 வயதான திரு. ஜோர்மன் வாக்கர் ஆசிரியப் பயிற்சிப் பகுதியின் டைரக்டராகும். பத்திரிகைகள் நிறைந்த பிலீட் வீதி, புதிதாக பயிற்சி பெறுபவர்களுக்கு உகந்ததல்லஎன்றும், உஷ்ண சூழ்நிலை பயிற்சிகளுக்கு ஏற்றதல்ல என்றும், எனவே தென் மேற்கு இங்கிலாந்திலுள்ள பீளைமவுத்தில் பயிற்சி அளிக்கப்படும் என்றும் திரு. வாக்கர் கூறினுர்.

பயிற்சிக்கு எடுக்கப்படுபவர்கள் சுருக்கெழுத்து, தட்டெழுத்து, பத்திரிகைச் சட்டம், ஸ்தலஸ்தாபன நிர்வாகம், பொலிஸ் நீதிமன்ற வேலைகள், பேட்டிகள், எழுத்துத்துறை ஆகிய அம்சங்களை வரிசைக் கிரமத்தில் கற்பார்கள். இவ்வளவிலும் வெற்றிகரமாகத் தேறியவர்கள் தகுதிப் பத்திரம் வழங்கப்படுவார்கள். (பி. டி. ஸி)

உலக அதிபார குத்துச்சண்டை

## 6வது ரவுண்டில் கிளே வென்ருர்

### இடது கண் சிதைந்த நிலையில் கூப்பரின் இரத்தக் காட்சி

லண்டன், மே 22

24 வயதான உலக அதிபார குத்துச்சண்டை சாம்பியன் காஷியஸ் கிளே, 32 வயதான பிரிட்டிஷ் வீரர் ஹென்றி கூப்பரை வென்று தனது சாம்பியன் பட்டத்தைக் காத்துக் கொண்டார்.

இன்று நள்ளிரவுக்குச் சற்றுப் பின் லண்டனில் நடைபெற்ற இச் சண்டையை 40,000க்கு மேற்பட்ட மக்கள் நேரடியாகக் கண்ணுற்றனர். அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றைச் சேர்ந்த கோடிக் கணக்கான மக்கள் 'ஏர்லி பேர்ட்'' வான்வெளிக் கிரகத்தின் மூலம் டெலிவிஷனில் அதைக் கண்ணுற்றனர்.

6-வது ரவுண்ட் ஆரம்பித்து 1 நிமிடம், 38 விநாடிகளில் சண்டை நிறுத்தப்பட்டது. கூப்பரின் இடது கண் மோசமான முறையில் சிதைந்து, முகமும், உடல் முழுவதும் இரத்த மயமாகக் காணப்பட்டதால், அபாய நிலையைத் தவிர்க்கும் பொருட்டு மத்தியஸ்தர் சண்டையை நிறுத்தினுர். கிளேயின் வலது புஜக்குத்து விழுந்த ஒரு சில விநாடியில் கூப்பருக்கு இரத்தப் பெருக்கேற்பட்டது. அதிபார குத்துச்சண்டை சரித்திரத்தில் அதிவேகம் பொருந்திய கிளேயின் தாக்குதல் கூப்பரின் தோல்விக்கு காரணமாயிற்று.

ஏனினும் எடுத்த எடுப்பிலேயே கூப்பர் தாக்குதலை ஆரம்பித்து, தம் பிரசித்தி பெற்ற இடது கைக் குத்தை பிரயோகிக்க முயன்ருர். முதல் இரண்டு ரவுண்டுகளில் அவர் ஆவேசமாகத் தாக்கினுர். ஆனுல் 3-ம், 4-ம் ரவுண்டுகளில் கிளே சரமாரியான வேகத்துடன் பொழிந்து தள்ளினுர். 5-ம் ரவுண்டில் இடது புறத்தாக்குதலை கூப்பர் ஆரம்பித்த போதிலும். கிளேயின் வேகம் காரணமாக அது வெற்றி பெறவில்லை. இக்கட்டத்தில் கிளே தனது வலது கையால் தாக்கியவுடன் கண்ணில் சிதைவு ஏற்பட்டு, இரத்தம் பெருகியது. சண்டை நிறுத்தப் பட்டது.

58 ஆண்டுகளுக்குப் பின் முதல் தடவையாக பிரிட்டனில் நடைபெற்ற அதிபார சண்டையில் இங்கிலாந்துக்கு அதிர்ஷ்டம் கிடைக்கவில்லை.

## மேற்கு ஜெர்மனியில் திரு. மேத்தா

பிராங்போர்ட், மே 22

இந்திய கைத்தொழில் கடன், முதலீட்டு கார்ப்பரேஷன் தலைவர் திரு எல். மேத்தா அமெரிக்கா செல்லும் வழியில் இங்கு ஒரு வாரகாலம் தங்கி நிற்கிருர். இவர் இங்குள்ள பல வங்கிகளின் அதிகாரிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தினுர்.

(பி. டி ஸி.)

## லேடி மாக்மில்லன் மரணம்

லண்டன். மே 22

முன்னுள் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் மாக்மில்லனின் மனைவி, டோரதி மாக்மில்லன் சீமாட்டி நேற்றுக் காலமானுர். அவருக்கு வயது 65.

## பிரிட்டிஷ் அரசி

லண்டன், மே 22

ஆஸ்திரியாவுக்கு விஜயம் [illegible] அழைப்பை பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத் ஏற்றுக் கொண்டிருக்கிருர்.

## பம்பாய், கல்கத்தாவில் அசம்பாவிதங்கள்

### 160 பேருக்கு காயம்

பம்பாய், மே 2!

இந்தியாவின் இரு பெரும் நகரங்களில் நேற்று ஏற்பட்ட ஆர்ப்பாட்டங்கள் காரணமாக ஒருவர் மாண்டார். 160க்கு மேலானோர் காயமடைந்தனர். நூற்றுக்கணக்கானோ கைதுசெய்யப்பட்டனர்.

பம்பாயில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்துக்கு அருகில் பிரதமர் இந்திரா காந்திக்கு முன்பாக நடத்தப்படவிருந்த ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து அசம்பாவிதம் ஏற்பட்டது.

மைசூர் - மகாராஷ்டிரா எல்லை நிர்ணயம் தாமதிக்கப்படுவதை எதிர்த்து இந்த ஆர்ப்பாட்டத்திற்கு எதிர்க்கட்சிகள் ஒழுங்குசெய்திருந்தன.

பொலிஸார் உட்பட 100 பேர் இச்சம்பவத்தின் விளைவாகக் காயமடைந்தனர்

வட கல்கத்தாவில் சில பகுதிகளில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாகச் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பை ரணுவம் மேற்கொண்டது. சிலபகுதிகளில் ஊரடங்குச்சட்டம் போடப்பட்டுள்ளது. பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையே ஏற்பட்ட கைகலப்புக் காரணமாக ஒருவர் மாண்டார். 60க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்

## ஹாம்பர்க் ஹாக்கி

ஹாம்பர்க், மே 22

ஹாம்பர்க்கில் நடைபெறும் சர்வதேச ஹாக்கிப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று இந்தியாவுக்கும் மேற்கு ஜெர்மனிக்குமிடையே நடைபெறுகிறது.

நேற்று இந்தியா 2—0 கோல்களால் ஹாலந்தை வென்றது.

ஆஸ்திரியா 3—0 கோல்களால் டென்மார்க்கை வென்றது.

பிரான்ஸ் 1-0 கோலினுல் சுவிட்ஸர்லாந்தை வென்றது

பாகிஸ்தான் 3—0 கோல்களினுல் பிரிட்டனை வென்றது

மொத்தம் 12 நாடுகள் இதில் கலந்துகொண்டன.

## பஸ் விபத்தில் 14 பேர் பலி

மணிலா. மே 22

மணிலாவுக்கருகில் ஏற்பட்ட ஒரு பஸ் விபத்தில் 14 பேர் கொல்லப்பட்டனர். 18 பேர் காயமடைந்தனர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நாட்டின் விமோசனத்துக்கு சர்வோதயதத்துவம் அவசியம்"

கொழும்பு, ஞாயிறு நாடு இருக்கும் நிலைமையில் சர்வோதய தத்துவத்தைப் பரப்பவேண்டியது நாட்டின் விமோசனத்தைக் கருதி மிக அவசியமாக இருக்கிறது. பழைய அநீதி நிறைந்த சமுதாய அமைப்பை நீக்கி புதிய ஒரு சமத்துவ சமுதாயத்தை உருவாக்கவேண்டும் என்ற சிந்தனை நாட்டில் வளர்ந்து வருவதை நாம் காண்கிறோம். ஆன்மீக அடிப்படையில் சமத்துவசமுதாயத்தை உருவாக்குகின்ற குறிக்கோளை உடைய புனிதமான சமுதாயத்தை உங்களைப் போன்ற வாலிபர்கள் முன்னிலையில் உருவாக்கவேண்டும். முதலியார் எஸ். சின்னத்தம்பி அகில இலங்கை காந்தியசேவாசங்க கொழும்புக்கிளையின் ஆதரவில் சங்கக் காரியாலயத்தில் நடைபெற்ற சிரமதான ஊழியருக்கான விசேட பயிற்சித்திறி வகுப்பில் பேசும்போது கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: ''தென்னிலங்கையில் தோன்றிய சர்வோதய சிரமதான இயக்கமும் வட இலங்கையில் தோன்றிய அகிலஇலங்கை காந்திய சேவாசங்கமும் காந்தி வழியாகிய சர்வோதய தத்துவத்தை சிரமதான மூலமாக இந்நாட்டின் பல பாகங்களிலும் பரப்பி வருகிறது. அகில இலங்கை காந்திய சேவாசங்கத்தின் கொழும்புக்கிளை நூற்றுக்கணக்கானவர்களை இந்த இயக்கத்தில் ஈடுபடுத்தி வாரந்தோறும் சர்வோதய தத்துவத்தில் பயிற்சிவகுப்புகள் நடத்துகின்ற ஒரு திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றது.

பயிற்சிவகுப்புகள் வாரந்தோறுங்போயா தினத்துக்கு மறுநாள் மாலை 6 மணி தொடக்கம் நடைபெற்று வருகிறது.

---

## பாடசாலைகளில் இலக்கியக்கூட்டங்கள்

### அனுமதி கொடுக்குமாறு இலக்கியவட்டம் கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்.

பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றபின் தமிழ்மொழி வளர்ச்சி சம்பந்தமான இலக்கியக் கூட்டங்கள் நடத்துவது கஷ்டமாகியுள்ளது கலை, கலாச்சார வளர்ச்சிக்குத் தேசிய அரசாங்கம் முக்கியத்துவம் கொடுத்துவரும் இக்காலத்தில் கல்வியின் ஓரங்கமான கலை, கலாசார நிகழ்ச்சிகளையும், இலக்கியக் கூட்டங்களையும் நடத்துவதற்குக் கல்லூரி மண்டபங்களை உபயோகிப்பதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. ஆதலால் கல்வி கலாசார அமைச்சரும், வடமாநில உதவி வித்தியாதிபதியும் கலை கலாசார நிகழ்ச்சிகளையும், இலக்கியக் கூட்டங்களையும் நடத்துவதற்கு கல்லூரி மண்டபங்களை இலவசமாகக் கொடுத்துவதவேண்டும்.

யாழ். இலக்கிய வட்டத்தின் கூட்டம் யாழ். நகர மண்டபத்தில் இரசிகமணி கனக. செந்திநாதன் தலைமையில் நடைபெற்றபோது மேற்படி தீர்மானம் நிறைவேறியது.

யாழ். மத்தியகல்லூரி மண்டபத்தில் 24ந் தேதி திரு. எஸ். பொன்னுத்துரை எழுதிய 'வீ' என்ற சிறுகதை தொகுதிவெளியீட்டு விழாவை நடத்துவதென்றும், பிறநாட்டு அறிஞர்களின் இலக்கிய நூல்களைப் பெறுவதற்குரிய அந்நியச் செலாவணிக் கட்டுப்பாட்டு தடையைநீக்கி வெளிநாட்டு நூல்களைத் தீர்வை எதுவுமின்றி வரவழைக்க இலக்கிய சங்கங்களுக்கு விசேஷ அனுமதி வழங்க வேண்டுமென்று கல்வி கலாசார அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் ஜூன் மாதம் 6ந் தேதி திருவள்ளுவர் தினத்தை யாழ். நகரமண்டபத்தில் கொண்டாடுவதென்னும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன.

---

## கல்லூரியின் வளர்ச்சி

### பழைய மாணவரின் ஆதரவு தேவை

யாழ்ப்பாணம். திங்.

''எமது பழைய மாணவர்களிடமிருந்து எமது கல்லூரி எதிர்பார்ப்பது அவர்களின் அன்பும் ஆதரவுமே, என்று அண்மையில் நடைபெற்ற ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் திரு. வி. சுப்பிரமணியம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளை ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்தியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கல்லூரியின் முன்னேற்றத்திற்காக உழைத்த பெரியார்களின் இலட்சியங்களை மனதில்கொண்டு கல்லூரியின் வளர்ச்சிக்கு பழைய மாணவர் அனைவரும் அயராது உழைக்க கடமைப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தின் ஆரம்பத்தில் மறைந்த முன்னாள் முகாமையாளர் டாக்டர் எஸ். சுப்பிரமணியத்திற்கும் முன்னாள் அதிபர் திரு. வி. முத்துக்குமாருவுக்கும் நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. சி. சுப்பிரமணியம், கல்லூரியின் பழைய மாணவரும், இ. போ. ச. அதிகாரியுமான திரு. என் எஸ். கந்தையா ஆகியோரும் கூட்டத்தில் பேசினர்.

அடுத்த ஆண்டிற்கான உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: அதிபர் வி. சுப்பிரமணியம்; உபதலைவர்கள்திருவாளர்கள்; வி. தர்மலிங்கம் (பா. உ.), சி சுப்பிரமணியம் (முன்னாள் அதிபர்), ரி. பொன்னம்பலம் (இளைப்பாறிய ஆசிரியர்), ஏ. விஸ்வநாதன், என். எஸ், கந்தையா, இணைச்செயலாளர், திரு. நாகரத்தினம் எவி. எஸ். நடராசா, பொருளாளர்: ஏ. வி. இராசையா பத்துப்பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

---

## காணமற் போன மீனவர் படகு

யாழ்ப்பாணம், திங்கள்

இரணைதீவு துறைமுகத்திலிருந்து சில தினங்களுக்கு முன்னர் நவாலி தெற்கு சண்முகத்துக்குச் சொந்தமான காணமற்போன மீன்பிடிப்படகு ஒன்று அடைச்சவேலி எனுமிடத்தில் பத்திரமாகவிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இரணைதீவில் கட்டிவைக்கப்பட்டிருந்த இப்படகை யாரோ சிலர் அவிழ்த்துக் கடலில் செல்லவிட்டனர் என்றும் கடலில் நெடுந்தூரம்வரை சென்றபின்னர் இரணைதீவிலிருந்து இருபத்தைந்து மைல் தூரத்தில் கரைதட்டியதென்றுத் சிலரின் உதவியுடன் அது அங்கு பத்திரமாகக் கட்டி வைக்கப்பட்டதென்றும் சொல்லப்படுகிறது. இரண்டு நாள்வரை காணமற்போன இப்படகு எவ்வித சேதமும் ஏற்படாதவாறு உரிமையாளரிடம் கிடைத்துள்ளது.

---

## தெல்லிப்பழை கொலைவழக்கு

### 27 ந்திகதி விசாரணை

மாவிட்டபுரம், ஞாயிறு

தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்தவர்களான ஆண்டி முதலி, நீலன் முருகன், ஆண்டி கதிரன், நாகன் மாதன், ஆண்டி சடையன், ஆண்டி அருள் ஆகிய ஆறு பேரும் சென்ற மாதம் 7-ந் திகதி தெல்லிப்பழை கிழக்கில் சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியதாகவும், கலகம் விளைவித்ததாகவும், முதலி சின்னவன் என்பவரைக் கொலைசெய்ததாகவும் சுன்னாகம் பொலிஸாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம்நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துறுபானு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது

சுன்னாகம்பொலிஸார் நீதிபதியின் அனுமதியுடனமுன்னர் பீனல் கோர்ட் சட்டத்தின் 296, 140, 145-ம் பிரிவின்கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட குற்றப்பத்திரிகையை 296,146, 145-ம் பிரிவுகளுக்கு அமைய மாற்றியமைத்தார்கள். நீதிபதி புதிய குற்ற பத்திரிகையை எதிரிகளுக்கு வாசித்துக்காட்டிய பின் வழக்கை விசாரணைக்காக இம்மாதம் 27-ம்திகதிக்கு ஒத்திவைத்து, அத்திகதிவரை எதிரிகளை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

---

## சமாதான நீதவான்

உடுப்பிட்டி, ஞாயிறு

ஊரெழு மேற்கைச் சேர்ந்த திரு. பொன்னம்பலம் நடராஜா யாழ்ப்பாண மாவட்டத்திற்கு சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இரத்தினபுரியில் பிரதம தபால் அதிபராகவும், தபாற் கந்தோர் விசாரணை உத்தியோகத்தராகவும் கடமையாற்றினர்.

1956-ம் ஆண்டு கிராம முன்னேற்றச் சங்கத்தலைவராயிருக்கும் பொழுது அரசாங்கத்தில் 2 லட்சம் ரூபா கடன்பெற்று தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு 48 வீடுகளும். 16 கிணறுகளும் இடைக்க உதவினர். இவர் கோப்பாய் அரசினர் வைத்தியசாலையின் உத்தியோகப் பற்றற்ற மேற்பார்வையாளராகும்.

---

# பருளை முருகன் ஆலயம்; இன்று கொடியேற்றத் திருவிழா

முருகப்பெருமான் வாசஞ்செய்வதற்கு ஏற்ற வனப்புமிக்க வயல்களும், கவின் மிகுகழனிகளும், கடப்பஞ்சோலைகளும் ஏழில் மிக்க நீர் நிலைகளும் தாமரைத் தடாகங்களும் மலர்ச் சோலைகளைகளும், மஞ்ஞைகள் கூட்டமும் தென்றல் காற்றில் அசைந்து இன்னிசை பரப்பும் இலைகள் நிறைந்த வெள்ளரச நிழலும் அமைந்த சிறப்புமிக்க சிற்றூர்தான் பருளை.

இத்துணை இயற்கை மிகு பருளையம்பதியிலே அண்ணன் விநாயகன் அரவணைப்பில் ஒய்யாரத் தோற்றத்துடன் ஆயிரங்கோடிகாமர் அழகெல்லாந்திரண்டு ஒன்ருகி மேவின. எனினும் அவன் விமலமாம் சரணம் தனக்குக்கூட ஒப்புவமை கூற முடியாத கவின் பெறு வனப்புடை கலியுகவரதன் எந்தை ஷண்முகப்பெருமான் குறவள்ளி தெய்வயானை சமேதராக அடியார்கட்கு காட்சியளித்து அருள் புரியும் அண்ணலாக அமர்ந்தருளியிருக்கின்ருர்.

யாழ்ப்பாணத்திலிருந்து மேற்கே பத்துக்கல் தூரத்தில் சுழிபுரம் என்ருெரு கிராமமுண்டு. சுழிபுரத்தின் வடபகுதியில் பருளை என்ற சிறு பகுதியுண்டு. பருளை என்ருல் மேட்டுநிலம் என்று பொருள். முருகப்பெருமான் வாஞ்செய்வது மேட்டுநிலத்தில் என்பது குன்றுதோருடி வரும் குமரவடிவேலன் என்ற பாட்டின் மூலம் நாம் அறியலாம்.

பருளையில் இரண்டு பழம்பெரும் ஆலயங்கள் இருக்கின்றன. ஒன்றுபருளைவிநாயகர்ஆலயம். மற்றையது முருகன் ஆலயம். இந்த முருகன் ஆலயத்தில் இன்று தொடக்கம் பன்னிரண்டு நாட்கள் திருவிழா நடைபெறும் பதினெராந் திருவிழாவன்று தேரும் அடுத்த நாள் திருவடிநிலை என்ற இடத்தில் சமுத்திர தீர்த்தமும் நடைபெறும்.

இக்கோவிலின் தேர் பழமை வாய்ந்தது சிறப்புமிக்கது. புகழ்பெற்றது. பார்த்தவர்கள் புகழும் சிற்பத்திறமை உள்ளது. ஆறுமுகப்பெருமான் இத்துணை சிறப்புமிக்க தேரிலே வீற்றிருக்கும் கோலாகலக் காட்சியைக்காண்பவர்கள் ''மனிதப்பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே'' என்று வாயாரப் பாடி, மனதார நினைத்து, பேரானந்தப் பெருங்கடலில் திளைப்பார்கள்.

திருவிழா பன்னிரண்டு தினங்களிலும் குறிப்பாக ஷண்முகார்ச்சனை சிறந்த அம்சமாகும். கோவிலிலே முருகப்பெருமான் புன்னகையுடன் எம்மவர்களை அழைத்து அருள் கொடுப்பதிலும் முன்னிற்கின்ருர். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முப்பெருமையும் வாய்ந்தது பருளை.

''நந்து தவழ் நதிதனிலாம்
பன்னி மருஞ்சுந்தரம் சேடும்
பழனப பருளை''

என்று பருளையின் சிறப்பைப் பாடினர் சின்னத்தம்பிப் புலவர்.

சங்கு நதியிலே தவழ அதனது தண்ணிலவொளியால் ஆம்பல் மலரும் அழகுமிக்க வயல் சூழ்ந்த பருளை என்பது இதன் கருத்து.

இப்படிப் பல சிறப்புகளைக் கொண்ட பருளையம்பதியில் உள்ள முருகன் ஆலயத்தில் இன்று பிரம்மஸ்ரீ ச. சுப்பிரமணியக்குருக்களால் கொடியேற்றித் திருவிழா தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் நடைபெறும்.

— இ பிரேமகாந்தன்

---

## பாகிஸ்தானில் பத்திரிகைச் சட்டம்

ராவல்பிண்டி, மே 22

பாகிஸ்தானில் செய்திபத்திரிகைகளை நிறுத்தும் அதிகாரத்தை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. புதிய பாதுகாப்புச்சட்டத்தின்படி பத்திரிகைகளை நசுக்கும் அதிகாரத்தை அரசாங்கம் கொண்டிருக்கும்.

---

## 25 கோடி டாலர்

ராவல்பிண்டி. மே 22

அமெரிக்க பொதுச்சட்டம் 480ன்படி பாகிஸ்தானுக்கு 35 கோடி டாலர் உதவியளிக்கும் பேச்சுக்கள் துவங்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டது.


1966—ம் வருடத்து

## மிஸ் இலங்கை போட்டி



இப்போட்டியில் வெற்றியீட்டியவர்களின்

பெயர்களை

**பி. ஸி. ஸி. சுவேந்திரா**

மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறது.

1-ம் பரிசு ரூபா 500: செல்வி சந்திரா வில்சன், 403, கோட்டை ரோட், பிற்றகோட்டை.

2-ம் பரிசு ரூபா 250: செல்வி நோனு பிந்தன் இப்ருகிம், 282, டைக் வீதி, டிவிஷன் நம்: 3 திருகோணமலை.

3-ம் பரிசு ரூபா 100: செல்வி எஸ. கே. சாலி, 905 அம்பகஹாவத்த ரோட், நாவின்ன, மகரகம.

தலா 50 ரூபா பெறும் ஆறுதல் பரிசுகள்

1. பி. சர்வலோகநாயகி, அரசடி ஒழுங்கை, மட்டக்களப்பு.
2. வி. செல்வரத்தினம், சைக்கிங் ஸ்ரோர்ஸ், ஓமந்தை.
3. திருமதி ஹேமா குணதிலக கே. எம். போபிட்டிய மகா வித்தியாலயம், போபிட்டிய.
4. இராணி திசநாயக்கா, 15, பாலா பிளேஸ், கொழும்பு-8.
5. செல்வி எம். தோமஸ், 10, மாதப்பிட்டிய ரோட், முகத்துவாரம், கொழும்பு-15.

பிரிட்டிஷ் சிலோன் கோப்பரேசன் லிமிட்டெட்,

ஹல்ஸ்டோர்ப் மில்ஸ், கொழும்பு 12.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### அறிவித்தல்

'ஈழநாடு' பத்திரிகையைப் பின்வரும் இடங்களில் விற்பனை செய்வதற்கு ஏஜண்டுகள் தேவை.

1. தோலகட்டி
2. பூநகரி
3. முருகண்டி

விபரங்கட்டு விநியோக மனேஜர் 'ஈழநாடு' லிமிட்டெட் த. பெ. எண் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 425

### ஆசார்ய அபிஷேக விஞ்ஞாபனம்

நிகழும் பராபவ வருஷம் தமிழ் வைகாசி மாதம் 12-ந் திகதி புதன்கிழமை காலை 7 மணி தொடக்கம் 8 மணி 49 நிமிடம் வரையுமுள்ள சுபமுகூர்த்த வேளையில் மகாமாரி அம்மன் தேவஸ்தானத்தில் சங்கானை திரு. சு. சிவானந்தக்குருக்களின் மகன் திரு. சோமசுந்தரசர்மாவிற்கு ஆசார்ய அபிஷேகம் செய்யப்படும்.
நா. சோமசுந்தரக்குருக்கள். 428

REGAL—JAFFNA
NOW SHOWING!
Charles Bronson - Susan Oliver
in
GUNS OF DIABLO
(M.G.M's
Thrilling action Film)

ராஜா
(யாழ்ப்பாணம்)
மேதாவிகள்
24-ந் திகதி முதல்
தெய்வத்தாய்


# மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்.

யாழ். மாவட்ட மென்பந்து கிரிக்கெட் விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் சில முடிவுகள் வருமாறு:

### இனிங்சால் வெற்றி

யாழ். ஓ. எல். ஆர். விளையாட்டுக் கழகத்துக்கும் கொய்யாத்தோட்டம் யுத்லீக் விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்ற போட்டியில்முதலில் துடுப்பெடுத்தாடிய யுத்லீக் விளையாட்டுக்கழகம் சகல விக்கட்டுகளையும் இழந்து 7 ஓட்டங்களையும், ஓ. எல். ஆர். விளையாட்டுக்கழகம் 66 ஓட்டங்களையும் எடுத்தது. 2-வது இனிங்ஸில் 'யுத்லீக்' கோஷ்டி சகல விக்கட்டுகளையும் இழந்து 36 ஓட்டங்களைப்பெற்றது. இப்போட்டி முடிவில் யாழ். ஓ. எல். ஆர். விளையாட்டுக் கழகம் இனிங்ஸால் வெற்றியீட்டியது.

### கென்னடி கோஷ்டி வெற்றி

நீராவியடி விளையாட்டுக் கழகத்துக்கும் கென்னடி ஞாபகார்த்த விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்றபோட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நீராவியடிக்கோஷ்டி சகலவிக்கட்டுகளையும் இழந்து 37 ஓட்டங்களையும் கென்னடி ஞாபகார்த்தக்கோஷ்டி 32 ஓட்டங்களையும் பெற்றது. 2-வது இனிங்ஸில் நீராவியடிக் கோஷ்டி சகல விக்கட்டுக்களையும் இழந்து 41 ஓட்டங்களையும் 'கென்னடி' கோஷ்டி 8 விக்கட்டுகளை இழந்து 48 ஓட்டங்களையும் பெற்றுவெற்றியீட்டியது.

### சென் அலோசியஸ வெற்றி

கந்தர்மடம் யங் சென்றலெட்ஸ் கோஷ்டியினருக்கும் சென். அலோசியஸ் விளையாட்டுக்கழகத்துக்குமிடையே நடைபெற்றபோட்டியில் முதல் இனிங்ஸில் கந்தர்மடம் கோஷ்டி சகல விக்கட்டுகளையும் இழந்து 11 ஓட்டங்களும் சென். அலோசியஸ் 39 ஓட்டங்களும் பெற்றன. 2-வதுஇனிங்ஸில் கந்தர்மடம் சகல விக்கட்டுகளையும் இழந்து 40 ஓட்டங்களையும் சென். அலோசியஸ் கோஷ்டி 3 விக்கட்டுகளை இழந்து 14 ஓட்டங்களையும் பெற்றது, இப்போட்டி முடிவில் சென். அலோசியஸ் கோஷ்டி 7 விக்கட்டுகளால் வெற்றியீட்டியது

### அரியாலை வெற்றி

அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் சி பிரிவுக்கும், ஆனைப்பந்தி விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற போட்டியில் முதல் இன்னிங்ஸில் அரியாலைகோஷ்டி சகல விக்கட்டுகளையும் இழந்து 72 ஓட்டங்களையும், ஆனைப்பந்தி விளையாட்டுக் கழகம் 46 ஓட்டங்களையும் பெற்றன. 2வது இன்னிங்ஸில் ஆனைப்பந்தி விளையாட்டுக்கழகம் 69 ஓட்டங்களையும், அரியாலை கோஷ்டி 65 ஓட்டங்களையும் பெற்றது. இப்போட்டி முடிவில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஆனைப்பந்தி விளையாட்டுக்கழகத்தை 22 ஓட்டங்களினால் வெற்றியீட்டியது.

### வெற்றி தோல்வி இல்லை

யாழ். லயன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் ஏ பிரிவுக்கும் நல்லூர் றோயல் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற போட்டியில் யங்லயன்ஸ் சகல விக்கட்டுகளையும் இழந்து முதல் இன்னிங்ஸில் 83 ஓட்டங்களையும் றோயல்கோஷ்டி 68 ஓட்டங்களையும் பெற்றன, 2வது இன்னிங்ஸில் யாழ். லயன்ஸ் 54 ஓட்டங்களையும் றோயல்கோஷ்டி 5 விக்கட்டுகளை இழந்து 25 ஓட்டங்களைப்பெற்றது. இப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இப்போட்டிகள் யாவும் யாழ் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்றன.


நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
என். டி. ராமராவ் - கே. மாலதி
நடித்த
பாதாள பைரவி

கடைசி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை)



சிவாஜி கணேசன் - சாவித்திரி
(9 மாறுபட்ட வேடங்களில்)
மற்றும் பலர் நடித்திருக்கும்
நவராத்திரி

24-ந் திகதி முதல்
கிங்ஸ்லி பிளாஸா நவா
வெலிங்டன் விஜயா
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
தெய்வத்தாய்


## சன சமூக நிலைய உபவிழா

உடுப்பிட்டி, ஞாயிறு

வடமராட்சி சன சமூக நிலையங்களின் உபவிழாச் சபையின் நிர்வாக சபைக் கூட்டம் வல்வை சன சமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு உள்ளூராட்சிஆய்வுப்பரிசோதகர் திரு. மஜீட் தலைமை வகித்தார். வடமராட்சி சனசமூக நிலையங்களின் உபவிழாவை ஜூன் மாதம் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் கொண்டாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## அரவம் தீண்டி மரணம்

உடுப்பிட்டி, ஞாயிறு

கரவெட்டி கிழக்கைச்சேர்ந்த சி. பாறுபதி எனும் பெண் முத்திரைப் புடையன் பாம்பு கடித்து மரணமானார். உடனடியாக சிகிச்சை [illegible] உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.


## வரி விளம்பரம்

### தேவை

அச்சுக்கோர்ப்பதில்
பயிற்சி பெறுபவர்கள்

தினசரிப்பத்திரிகை ஒன்றுக்கு அச்சுக்கோர்ப்பதில் (கொம்போஸிங்) பயிற்சி பெறுவதற்குப் படித்த இளைஞர்கள்உடனடியாகத்தேவை. தமிழ்மொழியில் போதுமான அறிவு பெற்றிருப்பது அவசியம். ஆங்கிலத்தில் அறிவு பெற்றிருப்பது மேலதிக தராதரமாகக்கணிக்கப்படும், விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்கும் 25 வயதுக்குட்பட்டவர்களாகவும் நல்ல உடலுறுதியுடையவர்களாகவும் இருக்கவேண்டும். விளம்பர இலக்கம்: 383 'ஈழநாடு' மேற்பார்த்து த. பெ. 49, யாழ்ப்பாணம். என்ற விலாசத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 383

தொழிலாளர்

யாழ்ப்பாணத்தில் அண்மையில் ஆரம்பித்த பித்தளை உருக்குத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்தும் பித்தளைப் பிணைச்சல்கள், கைபிடிகள், பூட்டுகள் மற்றும் பித்தளைச் சாமான்களை உயர்ந்தமுறையில் மட்டசுத்தமாக எமரி (Emery) அடித்து பொலிஸ் (Polish) செய்வதற்கு சுமார் ஐந்து வருட அனுபவம் வாய்ந்த தேர்ச்சிபெற்ற தொழிலாளர் உடனே தேவை. விளம்பர இல. 382, 'ஈழநாடு' மே./பா. என எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 382

நெசவாளர்கள்

நெசவாளர்கள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். திருமதி மனோன்மணி வைரவநாதன், திருமதி தில்லையம்பலம் மேற்பார்த்து, திருநெல்வெலி வடக்கு, திருநெல்வேலி. 380

### விற்பனைக்கு

மோட்டர்.....

நல்ல நிலைமையிலுள்ள 7-ம் நம்பர் இந்தியன் ஹல்லரும்; 10 அங்குல இங்கிலீஸ் கிரைண்டரும்; 12 அங்குல இங்கிலீஸ் கிரைண்டரும்; 7 1/2 ஹோஸ் பவர் மோட்டரும்; ஸ்ராட்டரும்; பெல்டுகளும் விற்பனைக்குண்டு. த. இராசரத்தினம், 72, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 368

### கல்வி

வகுப்புக்கள்

கலை/விஞ்ஞானம்/வர்த்தகம் (தமிழ்/ஆங்கிலம்) தையல்/சிங்களம் ஆகியவற்றிற்கு காலையிலும், பாடசாலை செல்லும் மாணவ/மாணவிகட்கு மாலையிலும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. 6-ம், 7-ம், 8-ம்வகுப்பு மாணவர்களுக்கும் மாலை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. விண்ணப்பிக்கவும். வர்த்தகக் கல்லூரி, வதிரி, கரவெட்டி. 373

வகுப்புக்கள்

கலை/விஞ்ஞானம் ஆகியவற்றிற்கு அனுபவமுள்ள பட்டதாரிகளாலும் 3 மாத, 6 மாத, 1 வருட தமிழ்/ஆங்கிலச் சுருக்கெழுத்துக்கும் மற்றும் வர்த்தகப் பாடங்களுக்கும் 44 வருட ஆசிரிய அனுபவமுள்ளவராலும், சிங்களத்துக்கும்/தையலுக்கும் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. விண்ணப்பிக்கவும். வர்த்தகக் கல்லூரி, ஸ்தாபிதம் 1924, பருத்தித்துறை. 372


## ரூ. 1900 அபராதம்

மாவிட்டபுரம், ஞாயிறு

கடந்த 6-ம் திகதி காங்கேசன்துறைப் பொலிஸ் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தி தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் மல்லாகம் கோர்ட்டடி ஒழுங்கையிலுள்ள ஒரு வீட்டை திடீரென சோதனையிட்டு சுமார் ஆறுயிரம்ரூபா பெறுமதியான 240 சங்கு மார்க் பழையகாட்சாரங்கள் கைப்பற்றப்பட்டது. சம்பந்தமாக விசாரணைகள் நடத்திய வடபகுதி உதவி சுங்கக்கலக்டர் திரு. எம். ஆளிஸ் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபருக்கு 1900 ரூபா அபராதம்விதித்ததுடன் கைப்பற்றப்பட்ட பொருட்களை அபராதம் செலுத்தியபின் திருப்பிக் கொடுக்கும்படியும் உத்தரவிட்டுள்ளார்.

## திருடர்கள் அதிகரிப்பு

உடுப்பிட்டி, ஞாயிறு

வதிரி ஆரியர் வளவைச் சேர்ந்த இராசலிங்கம் என்பவர் வீட்டில் 15 தங்கப்பவுன் பெறுமதியான தாலிக் கொடியும் வேறுபெறுமதியான பொருள்களும் திருட்டுப்போய்விட்டன. அதே இரவில் மாணிக்கம்என்பவர் வீட்டிலும் பெறுமதியான சில பொருள்களும் திருட்டுப்போயுள்ளன. சமீப காலமாக இப்பகுதியில் அதிகரித்தவரும் திருட்டுச்சம்பவங்களைத் தடை செய்வதற்காக வதிரி இளைஞர்கள் புதிய தொண்டர்படையொன்றை ஸ்தாபித்துள்ளனர். இத் திருட்டுக்கள் சம்பந்தமாக பருத்தித்துறைப் பொலிஸார் புலன்விசாரணைசெய்து வருகின்றனர்.


JAFFNA COLLEGE
Undergraduate
Department

G. C. E. (Adv. Level) Arts and Science-1967 Examination

Admission to the first year Courses will be made early in June. Intending applicants should forward stamped and self addressed long envelopes for Copies of the Prospectus and Application Form.

Applications close on 31st May 1966.

Registrar
Vaddukoddai. 387


## "உரை உலகில் ஒரு புதுமை"

உடுப்பிட்டி, ஞாயிறு

''பண்டிதர் வீரகத்தியினால் எழுதப்பட்ட காமதகன உரைவிளக்கம் உரை உலகில் ஒரு புதுமையாகும். காவியத்தை அணுகியமுறையில் அளித்த விளக்கமும் திறனாய்வும் நுண்ணிய இலக்கணக் குறிப்புகளும் ஒரு புதுமை எனத் துணிந்து கூறுவேன்'' என்று பண்டிதர் திரு. வி. கே. நடராசா, பண்டிதர் திரு. க. வீரகத்தியின் ''காமதகனம்'' உரை நூல் வெளியீட்டுவிழாவிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில்கூறினார். கரவெட்டி சரஸ்வதி பெண்பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பண்டிதர் திரு. குகவைரவனார் பேசுகையில், ''இவ்வுரைவிளக்கத்திலுள்ள முதற்படலமாகிய காமதகனப்படலம் சிறந்த விவாதமேடையாக்கப்பட்டுள்ளது. இவ்வுரையாளரின் நுண்ணிய தருக்க உணர்வு பிள்ளைகளின் சிந்தனையாற்றலைத் தூண்ட வழிசெய்கிறது'' என்று கூறினார்.

திரு. வ. சிவராசன், பண்டிதர் பொன். கணேசன், வித்துவான் பொன். சிவப்பிரகாசம், சைவப்புலவர் பண்டிதர் சௌபாக்கியநாயகி, நெல்லை க. பேரன் ஆகியோருட்படப் பலர் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்று கேட்டல்.

# வெளி ஸ்தாபனத்துக்கு சம்பந்தம் இருக்கலாம்!

## பிரதிநிதிகள் சபையில் லெஸ்லி

கொழும்பு, ஞாயிறு டெலிபோன் ஒற்றுக்கேட்கும் விஷயத்தில் வெளிநாட்டு ஸ்தாபனம் எதுவும் ஈடுபட்டிருக்கலாமென்றும் இதுபற்றி ஆராய ஒரு தெரிவுக்குழுவை அல்லது சபையின் இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருவரை நியமிக்கவேண்டும் என்றும் பாணந்துறை எம். பி. திரு. லெஸ்லி குணவர்த்தன இன்று பிரதிநிதிகள் சபையில் கூறினார்.

இப்போதும் உத்தரவின்றி டெலிபோன் ஒற்றுக்கேட்டல் இடம்பெறுகின்றன என தபால் தந்தி தொடர்பு மந்திரி மேஜர் மொண்டேகு ஜெயவிக்கிரமா புகார் தெரிவித்தார்.

பிரதமர் திரு. டட்லி தம்மிடம் தமது போனும் ஒற்றுக்கேட்கப்படுவதாகவும் மற்றும் மந்திரிகள் போன் செய்யும் போது ஒற்றுக்கேட்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளதாகவும் தபால் தந்தி மந்திரி தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் போனும் ஒற்றுக்கேட்கப்படுவது சாத்தியமென்றும் குறிப்பிட்ட மந்திரி பலபேர்களின் போன்கள் ஒற்றுக்கேட்கப்படுவதாக எடுத்துக் கூறினார்.

தந்தி சம்பந்தப்பட்ட சட்டங்களில் சில அம்சங்களை திருத்துவது சம்பந்தமாக பேசிய போதே மந்திரி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தந்தி தொடர்பு கமிஷனர் திரு. சி. பி. ஜி. அபயவர்த்தன ராஜினாமாச்செய்தது பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகையில் அவர்மீது குற்றம் சாட்டப்பட்டிருப்பதால் அவர் தொடர்ந்து கடமையாற்றவிருப்பாது ராஜினாமாச் செய்துள்ளார் என்றார். இவரது ஸ்தானத்தில் ஓய்வுபெற்ற சட்டஅதிகாரிஒருவர்நியமிக்கப்படுவாரென்றும் மந்திரி அறிவித்தார்.

டாக்டர் என். எம். பேசுகையில், டெலிபோன் ஒற்றுக் கேட்டல் அதிகாரத்துடன் செய்யப்பட்டாலும் அதிகாரமின்றி செய்யப்பட்டாலும் அது எந்த விதத்திலும் நிறுத்தப் படவேண்டியதொன்றாகும். என்று வற்புறுத்தினார்.

### வெளிநாட்டு தலையீடு

லெஸ்லி குணவர்தன பேசுகையில், டெலிபோன் ஒற்றுக் கேட்பது முன்பு இருந்தே நடைபெற்று வரும் ஒன்று அது ஒன்றும் புதிது அல்ல. ஆனால் டெலிபோன் ஒற்றுக் கேட்டல் வெளிநாட்டு ஸ்தாபனம் ஒன்றினால் செய்யப்படலாம் என்று சந்தேகிக்க இடமிருக்கின்றது என்றார். அவர் மேலும் பேசுகையில் இது விஷயமாக ஆராய்வதற்கு சபையின் இரு பகுதியினரையும் கொண்ட தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும். டெலிபோன் ஒற்றுக் கேட்டல் விஷயத்தில் சபையின் இரு பிரிவினரும் அக்கறை கொண்டிருப்பதால் இரு பகுதியினரும் ஒத்துக் கொள்ளக்கூடிய ஒரு பிரமுகரை இது பற்றி விசாரிப்பதற்கு சபாநாயகர் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

திரு. பேர்னாட் சொய்சாவும் பேசினார்.

---

## நட்டிலும நகரிலும

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

2,000 ஆண்டுகளுக்கு முன் தமிழர் நாகரீகம் மிக உன்னத நிலையில் இருந்ததாக கேள்விப்படுகிறோம். அப்பொழுது சாதாரண மக்கள் இப்பொழுது போல முகக்ஷவரம் செய்துகொண்டார்களா அல்லது தாடி வளர்த்தார்களா என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம். க்ஷவரம் செய்துகொண்டார்கள் என்றால் எப்படி செய்து கொண்டார்கள்? கத்தி, பிளேட், ரேஸர் எல்லாம் அப்பொழுது இருந்தனவா?

கம்பர் காலத்தில் நாவால் இதமாகப் பேசக் கூடிய நாவிதன் இருந்தான் என்று கேள்வி, அப்படியானால் அதற்கு முன்பும் சிகை அலங்காரம் செய்பவர்கள் இருந்திருக்க வேண்டும்.

இப்படியே சிந்தனை கோர்வையாகப் போய்க் கொண்டிருக்கையில் இன்னுமொரு எண்ணம் உதயமாகிறது. இக் காலத்தில் 'மொட்டமழித்தல்' நாகரீகமாயிருப்பது போல அக்காலத்தில் தாடி மீசைவளர்ப்பது நாகரீகமாய் இருந்திருக்கலாமோ?

-வழிப்போக்கன்

---

## திருமண அழைப்பு

சின்னத்துரை - கமலாம்பிகை ஊரெழு கிராம சேவையாளர் செல்வன் சின்னத்துரை அவர்களுக்கும், உரும்பிராம் கிழக்கு PWD ஓவசியர் இராமலிங்கம் தம்பதிகளின் புதல்வி செல்வி கமலாம்பிகை அவர்களுக்கும் 26-5-66 வியாழக்கிழமை பிற்பகல் 7-43—9-42 மணிவரையில் மணமகள் இல்லத்தில் நடைபெறவிருக்கும்திருமண வைபவத்திற்கு உறவினர்களையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சி. இராமலிங்கமும் பாரியாரும், அம்பிகைபவனம், உடும்பராய். வேலுப்பிள்ளையும் பாரியாரும் வாதரவத்தை, புத்தூர். 384

---

## தமிழரசு . . :

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிலநாட்களுக்கு முன் நடைபெற்ற அரசாங்கக் கட்சிக் குழு கூட்டத்தில் போதனா மொழியைப் பெற்றோரே தெரிவு செய்ய வேண்டும் என்ற கல்வி மந்திரியின் யோசனையை தமிழ் பேசும் எம். பி.க்கள் கடுமையாகக் கண்டித்தார்கள். ஆனால் இவர்களின் பிரேரணை வாக்கெடுப்புக்குவிடப்பட்டு தோல்வியுற்றது. தமிழரசுக் கட்சியின் செயற்குழு ஏற்கனவே கூடி கல்வி மந்திரியின் யோசனையை எதிர்ப்பதென முடிவு செய்திருக்கின்றது.

தமிழ் - மூஸ்லிம் அரசியல் கட்சிகள் யாவும் மேற்படி இரு கட்சிகளும் பிரதம மந்திரியுடன் நடத்த விருக்கும் பேச்சு வார்த்தைகளின் பெறுபேறுகளை அறிய ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றன.

ஏனென்றால் தமிழ்ப் பேசும் இனத்தின் எதிர்காலம் இதில் தங்கியிருப்பதாக அவர்கள் கருதுகின்றனர். தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்தபின் தமிழ் எம். பி.க்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையே நடைபெறும் மிக முக்கிய பேச்சு வார்த்தைகளாக இந்தச் சந்திப்பு இருக்கும் என்று கருதப்படுகின்றது.

கூட்டு மனப்பான்மையுடன் தமிழ் பேசும் இனத்தைப் பாதிக்கும் இந்த முக்கிய விஷயத்தை அணுக வேண்டியிருக்க தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் தனித் [illegible] கவலைக்குரிய விஷயம் என்று பலர் கருதுகின்றனர்.

---

## விலைக்கட்டுப்பாடு . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

விலையிலும் சிறிதுகூடுதலான விலைக்கு பொருள்களை வாங்கும் கிராமப்புற சில்லரை வியாபாரிகள், கட்டுப்பாட்டு விலையிலும் குறைந்த விலைக்கு எப்படி அவற்றை விற்பனை செய்யமுடியுமற என்றும்கேட்டார். மொத்தவியாபாரிகளைகட்டுப்படுத்த புதிய சட்டம் வழிவகுக்க வேண்டும் என்று அவர் கோரினார்.

பொருள்களின் விலைக் குறைப்புப்பற்றி திரு. கே. டி. டி. பெரேரா (சுதந்திரா) குறிப்பிடுகையில், ராஜாங்க மந்திரி கூறியதுபோல பொருள்களின் விலை எதுவும் குறையவில்லை என்றும் பல பொருள்களை சந்தையிலும் காணவில்லை என்றும் கூறினார்.

திரு. பேர்னாட் சொய்ஸா (சமசமாஜ) புதிய சட்டம் எதுவும் மக்களைத் திருப்திப்படுத்தாதென்றும் வர்த்தகத்தின் 'ஆணிவேரில்' ஏற்பட்டிருக்கும் ஊழல்களை முதலில் களையவேண்டுமென்றும் கூறினார்.

### பிரதமர் 'சூடு,

எதிர்க்கட்சியினரின் கருத்துக்கு விளக்கம் கொடுத்த பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா, தற்போதுள்ள நெருக்கடியான நிலையை உருவாக்கியது தேசிய அரசாங்கமில்லை என்றும் ஆனால் முன்தோன்றிய நெருக்கடிக்கு அரசாங்கம் ஆளாகிவிட்டது என்றும் 'சூடு" கொடுத்தார். கொள்ளைலாபமடிப்பவர்மீது நாம் தயவு தாட்சண்யம் காட்டமாட்டோம் என்றும் அவர் கூறினார்.

எங்களிடம் திட்டங்கள் உண்டு. திட்டங்களை உருவாக்குபவர்கள் எமக்குத் தேவையில்லை. திட்டங்களைச் செயல்படுத்துபவர்கள் தான் எமக்குத் தேவை என்று பிரதமர் தெரிவித்தார்.

பொதுமக்களைப் பாதுகாக்க உதவும் விலைக்கட்டுப்பாட்டு திருத்தச்சட்டத்தைக் கொண்டுவருவதற்கு சில அங்கத்தவர்கள் எதிர்ப்புத்தெரிவிப்பதைத் தம்மால் புரிந்துகொள்ளமுடியாமலுமில்லை என்பதைத் தமது ஆணித்தரமான பேச்சில் பிரதமர் டட்லி சேனநாயக்கா சொல்லாமல் சொல்லி வைத்தார்.

தொகுப்பு: மகான்

---

## தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், திங்கள் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா இன்று காலை 6 மணிக்கு ஆரம்பமாகும். தேர்த்திருவிழா முன்னர் போல் மாலையில் இல்லாமல் இனிமேல் காலையிலேயே நடைபெறும் என்று தெரிகின்றது.

---

## 350 ருத்தல்...,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புதைக்கப்பட்டது. மாநகர சபை உணவுப்பரிசோதகர் இத்திடீர்ப் பரிசோதனையை நடத்தினார். உணவு, மருந்துச்சட்டத்தை தீவிரமாக அமுல் நடத்துவதற்கு இப்பொழுது மாநகர சபை முடிவு செய்திருக்கிறதாம்.

---

வடபகுதி அசைஸ் விசாரணை

# மீசாலை கொலை வழக்கில் எதிரிக்கு இரு வருட கடூழியம்

யாழ்ப்பாணம், திங். என்ன இருந்தாலும் உனது சகோதரனைக் குத்தியிருக்கக்கூடாது. என்று மீசாலை கொலைவழக்கில் எதிரிக்கு இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கும்போது நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ தம்பையா கியூ. ஸி. குறிப்பிட்டார்.

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் மீசாலை கொலை வழக்கு நேற்றுக்காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சின்னத்தம்பி திருநாவுக்கரசு சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ம் திகதி மீசாலை தெற்கில் வேலன் மாணிக்கனை, அவரது சகோதரன் வேலன் பொன்னன் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் அட்வகேட் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் திருவாளர்கள் என். நடராசா, பெரியதம்பி சுந்தரலிங்கம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வகேட் எஸ். ஸ்ரீனிவாசன் நியமிக்கப்பட்டிருந்தார்.

சின்னத்தம்பி திருநாவுக்கரசு சாட்சியமளித்தபோது கூறியதாவது: இறந்தவரும் எதிரியும் கூடப்பிறந்த சகோதரர்கள். இறந்தவர் எனது சகோதரியை மணம் புரிந்திருந்தார். சம்பவம் நடந்ததினம் பிற்பகல் 2-30 மணிக்கு நான் மீசாலையிலிருந்து எனது ஊருக்குப் புறப்பட்டேன். காலஞ்சென்றவர் என்னை வழி அனுப்ப வந்தார்.

இறந்தவர் தனது தம்பியாரிடம் ''முட்டிகளை ஏன் கழட்டுகிறாய்'' என்று பணிவாகக் கேட்டார் உடனே எதிரி இறந்தவரின் வலது துடையில் கத்தியால் குத்தினார். காயத்தைப் பொத்தியபடி மாணிக்கம் நிலத்தில் விழும்சமயம் நான் அவரைப் பிடித்தேன். பின் ரோட்டிற்குத் தூக்கிச் சென்றேன். அச்சமயம் அந்த ரோட்டில் வந்த காரில் இறந்தவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றேன். அவ்வழியால் வந்த துரைச்சாமி என்பவர் கார் பிடிப்பதற்கு உதவி செய்தார்.

எதிரியும் இறந்தவரும் சந்தோஷமாக இருந்தார்கள் என்றும் இவர்களின் சகோதரி தங்கம்மாவை, ஏற்கனவே திருமணமான கந்தையா என்பவர் கடத்திச் சென்றதாகவும், காலஞ்சென்ற மாணிக்கம், தம்பதிகளைக் கூட்டி வந்து, தனது வீட்டில் வைத்திருந்ததாகவும், இது எதிரிக்குப் பிடிக்கவில்லையென்றும், இதனால்தான், சகோரர்களுக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டதென்றும், மேலும் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது சாட்சி கூறினார்.

விசாரணையின் நடுவில் எதிரி, காலஞ்சென்றவரை கொல்ல வேண்டுமென்று குத்தவில்லையென்றும், கடுங்காயம் விளைவித்த குற்றத்தை ஒப்புக் கொள்வதாகவும் தெரிவித்தார்.

கடுங்காயம் விளைவித்ததாக எதிரி ஒப்புக் கொண்டதை ஏற்றுக் கொள்வதாக ஜூரிசபையினர் தெரிவித்தனர்.

எதிரி சார்பில் ஆஜரான அட்வகேட் சண்முகநாதன், எதிரி இதற்குமுன் குற்றப்படவில்லையென்றும் அவர் திருமணமானவரென்றும், 25 வயதுடையவரென்றும் ஒரு வருடங்களும் 2 மாதமும் விளக்கமறியலில் இருந்துள்ளார் என்பதையும், நீதியரசரின் கவனத்திற்கு கொண்டுவந்ததை தொடர்ந்து, நீதியரசர் 2 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்தார்.

அசைஸ் விசாரணை மீண்டும் 29-ம் தேதி காலை 10 மணிக்கு ஆரம்பமாகும்.

---

## மந்திரிக்கு . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டால் பல்கலைக்கழகங்களின் சுதந்திரம் பெரிதும் பாதிக்கப்படும் எனவும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

உத்தேச மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ள தேசியக் கல்விக் கவுன்சில் உருவாக்கும்முறைக்கும் அதற்கு அளிக்கப்படவிருக்கும் அதிகாரங்கள் பற்றியும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

உத்தேச மசோதா பற்றி மந்திரிசபை ஆராய்ந்தபின் பாராளுமன்றக் குழுவுக்கு மீண்டும் சமர்ப்பிக்கப்படும் என பிரதமர் இறுதியில் தெரிவித்தார்.

---

## டைரக்டர் பதவியை ராஜினமா செய்தார்

கொழும்பு, ஞாயிறு பரந்தன்ரசாயனதொழிற்சாலையின் டைரக்டராகவிருந்த திரு. எஸ். ஞானலிங்கம் தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இவர் 1960-ம் ஆண்டில் இத்தொழிற்சாலையின் பிரதம நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டார். பின்னர் 1960 ம்ஆண்டு அதன்டைரக்டராக உயர்வுபெற்றார். இத்தொழிற்சாலையின் சீர்திருத்தத்துக்கு காரணகர்த்தாக்களாவிருந்தவர்களில் திரு. ஞானலிங்கமும் ஒருவராவார். திரு. ஞானலிங்கம் முன்னாள் வவுனியா எம். பி. திரு. சி. சுந்தரலிங்கத்தின் புதல்வராவார்.

---

## சிமெந்து . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யம் தலைமையில் நடைபெறும்.

புதிய சூளை ஆரம்பிக்கப்பட்டதும் வருடம் ஒன்றுக்கு 175,000 தொன் கிளிங்கரும் அதற்குச் சற்றுக்கூடுதலான தொன் சிமெந்து உற்பத்திசெய்யப்படும் இப்பொழுதுள்ள சூளை மூலம் 80,000 தொன் கிளிங்கர் உற்பத்திசெய்யப்படுறது. இரண்டாவது சூளை சரிவர இயங்க ஆரம்பித்ததும் பழைய சூளையின் வேலை நிறுத்தப்பட்டு நவீன முறையில் அச்சூளை புனருத்தாரணஞ் செய்யப்படுமென அறியப்படுகிறது.

---

## 17-வது ஆண்டு நிறைவு தினம்

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணம் மேற்றிராணியார் டாக்டர் எமிலியானுஸ்பிள்ளை ஓ. எம். கே. மேற்றிராணித்துவ அபிஷேகம் செய்யப்பெற்ற 17-வது ஆண்டு நிறைவுதினம் யாழ்ப்பாணம் மேற்றிராசனத்தில் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்தினத்தில் ஆயரின் திருத்தொண்டுக்காக கத்தோலிக்க தேவாலயங்களில் பிரார்த்திக்கப்படுமெனத் தெரியவருகிறது.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் [illegible] தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மே[illegible] இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மே மாதம் 23ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org